செய்தி வெளியீடு: 371

## பத்திரிக்கை குறிப்பு

இன்று 20.6.2007 காலை 11.00 மணியளவில் "அகில இந்திய கைத்தறிக் குழு"வின் முதலாவது கூட்டம் சென்னையிலுள்ள தாஜ்கோரமண்டல் ஹோட்டலில் மாண்புமிகு மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு சங்கர்சிங் வகேலா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் மாண்புமிகு மத்திய ஜவுளித்துறை இணை அமைச்சர் திரு ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், திரு டி.சி. தம்மண்ணா, துணைத் தலைவர், அரசு மற்றும் அரசு சாற்பற்ற குழு உறுப்பினர்களும் கலந்துக்கொண்டனர்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு மத்திய ஜவுளித்துறை அமைச்சர் அவர்கள் ஜவுளி உற்பத்தி, வேலைவாய்ப்பு மற்றும் ஏற்றுமதி வருவாய் ஈட்டுவதில் கைத்தறித்துறை முக்கிய பங்கு வகிப்பதாக தெரிவித்தார். வேளாண்மைக்கு அடுத்தப்படியாக அமைப்புசாரா பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளில் கைத்தறித்துறை பெரும்பங்கு வகிப்பதோடு ஊரக மற்றும் பகுதி ஊரக மக்களின் வாழ்வாதாரத்திற்கு பேருதவிபுரிவதாகவும் தெரிவித்தார். இன்று இத்துறையானது 35.00 இலட்சம் கைத்தறிகளைக்கொண்டு 65.00 இலட்சம் நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது எனவும் அதில் 62.4 சதவிகிதத்தினர் பெண்கள் மற்றும் சற்றேறக்குறைய 35 சதவிகிதத்தினர் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினர் ஆவர் எனவும் தெரிவித்தார். கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு கைத்தறித் துணி உற்பத்தியில் பின்தங்கியிருந்த நிலை மாறி 2004–05ம் ஆண்டிலிருந்து முன்னேற்றம் கண்டு வருவதாகவும் மத்திய ஜவுளித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். கைத்தறித் துணி உற்பத்தி, 2004–05ம் ஆண்டில் முந்தைய ஆண்டைக்காட்டிலும் 4.16 சதவீதம் (5722 மில்லியன் சதுர மீட்டர்) அதிகரித்துள்ளது எனவும் 2005–06ம் ஆண்டில் கைத்தறித் துணி உற்பத்தி 6108 மில்லியன் சதுர மீட்டர் அளவுக்கு உயர்ந்துள்ளது எனவும் இது

2004–05ம் ஆண்டைக்காட்டிலும் 6.75 சதவீதம் அதிகமாகும் எனவும் 2006–07ம் ஆண்டில் இவ்வுற்பத்தியானது கடந்த 2005–06ம் ஆண்டைவிட 6.75 சதவீதம் உயர்ந்து 6520 மில்லியன் சதுர மீட்டர் துணி உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மத்திய ஜவுளித்துறை அமைச்சராக பொறுப்பேற்றபின்பு இத்துறையானது பல்வேறு புதிய முன்னேற்ற நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும், ஒருங்கிணைந்த கைத்தறி செறிவு மேம்பாட்டுத் திட்டம், 273 புதிய நூல் கிடங்குகள், நெசவாளர்கள் சுகாதார திட்டம், மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டம் மற்றும் கைத்தறி முத்திரைத்திட்டம் போன்ற பல திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் மத்திய ஜவுளித்துறை அமைச்சர் அவர்கள் 11வது ஐந்தாண்டு திட்டத்தில் முந்தைய திட்டங்களை ஒருங்கிணைத்து 5 புதிய திட்டங்களான ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித்திட்டம், விற்பனை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி திட்டம், ஒருமித்த கைத்தறி நெசவாளர்கள் நல்வாழ்வு திட்டம், ஆலைநுழைவு விலையில் நூல் விற்பனை திட்டம், திருத்தியமைக்கப்பட்ட கைத்தறி வளர்ச்சி திட்டம் போன்ற திட்டங்களை அறிமுகப்படுத்த உள்ளதாகவும் தெரிவித்தார்.

மேற்படி கூட்டத்தில் அகிய இந்திய கைத்தறி குழுவின் உறுப்பினர்கள் கைத்தறித் துறையின் வளர்ச்சிக்காக தங்களது மதிப்புமிக்க ஆலோசனைகளை வழங்கினர்.

வெளியீடு:- இயக்குநர்
செய்தி மக்கள் தொடர்பு துறை
சென்னை